★ பக்கங்கள் 6 விலை சதம் 40

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார றோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து
அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம்செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

# The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8946/78
மலர்: 21 வைகாசி: 26 றஜப்: 13 இதழ்: 119
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9-6-79

'மில்க்வைற் நீலசோப்'
திருப்திரமான சலவைக்கு மில்க்வைற் நீலசோப்பை வாங்கி உபயோகியுங்கள். 100 நீலசோப் மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் அப்பியாசக் கொப்பியை அல்லது அழகிய பொலிதீன் பாக்கை பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

# தமிழ்மக்களின் பிரச்னை மிகவும் கவலை அளிக்கிறது

## வெளிநாட்டு நிருபர்களிடம் சிறிமா

## சிக்கலைத் தீர்க்க அரசு

### எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை

[கொழும்பு]

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை எமக்கு கவலை அளிக்கிறது. அவர்களின் பிரச்னைகளை வட்டமேசை மகாநாட்டின்மூலம் தீர்த்து வைப்பதாகக் கூறிவரும் இன்றைய அரசு அது குறித்து இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று வெளிநாட்டு பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியகக் கூட்டத்தில் செய்திகளைச் சேகரிப்பதற்காக இங்கு வந்துள்ள பத்திரிகையாளர் மத்தியில் திருமதி பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:

இந்தியாவில் திருமதி இந்திரா காந்திக்கு நடப்பது போன்று இன்றைய அரசு எனக்குப் பலவழிகளிலும் அநீதிகளை இழைத்து வருகிறது.

எமது ஆட்சிக்காலத்தில ஏதோ சட்டவிரோத செயல்கள் இடம்பெற்றதாகக் கூறி ஜனாதிபதி விசேட ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வரும் அரசு எனக்காக சட்டம் ஒன்றைக்கூட மாற்றி அமைத்தது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைகேடாக நடத்தப்பட்டுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விகிதாசார தேர்தல் முறையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுத்தேர்தல் முடிவுற்று ஒன்றரை ஆண்டுகளின் பின் புதிய முறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின்போது பிரதமர் திரு பிரேமதாசா தாமே உள்ளூராட்சி அமைச்சராக இருப்பதால் பொதுமக்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளித்தால்தான் தாம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி உதவி அளிப்பதாகவும் ஐ. தே. க. ஆட்சிக்குவராத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படமாட்டாது என்றும் கூறியுள்ளார். இது

[6ம் பக்கம் பார்க்க]

## கிராமாட்சிமன்றத் தேர்தல்; கூட்டணி-காங்கிரஸ் சமரசம்?

[யாழ்ப்பாணம்]

கிராமாட்சிமன்றங்களில், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸிற்குமிடையில் போட்டிதவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த பூர்வாங்கமான பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

வடபகுதியிலுள்ள ஒரு தொகுதி கூட்டணி கிளையின் முக்கிய உறுப்பினர் அத்தொகுதியின் தமிழ்க் காங்கிரஸ் இணைச்செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனராம்.

கூட்டணியும், தமிழ்காங்கிரசும் ஒரே லட்சியத்தைக் கொண்டுள்ளதாலும், கிராமாட்சி மன்றங்களில் மூன்றாவது கட்சியை முறியடிப்பதற்கு இந்த உடன்பாடு அவசியமென்று கூறப்படுகிறது.

புதிய தேர்தல் முறைப்படி எப்படி தேர்தல் ஒப்பந்தம் செய்யலாம் என்பது பற்றியும் ஆராயப்பட்டதாம்.

காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் இம்மாதம் 24ம் தேதி நடைபெறவிருக்கும் கூட்டமொன்றில் இது பற்றி முடிவு எடுக்கப்படவிருக்கிறதாம். இது தொடர்பாக இம்மாதம் 30ம் தேதியும் ஒரு கூட்டம் நடைபெறவிருக்கிறதாகக் கூறப்படுகிறது. [கா]

## யாழ். மாவட்ட புதிய அரச அதிபர் ஆரியரத்தின

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் புதிய அரசாங்க அதிபராக கொழும்பில் புள்ளிவிபர இலாகாவில் பிரதி ஆணையாளராகக் கடமையாற்றும் திரு டி. எம். ஆரியரத்தின நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக மிகக் குறுகிய காலமே கடமையாற்றிய திரு லயனல் பெர்னாண்டோ வர்த்தக கப்பல் துறை அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்

## தமிழ் மறைக் கழகத்தின் 19வது திருக்குறள் மகாநாடு

### இன்று நெடுந்தீவில் ஆரம்பமாகிறது

[நெடுந்தீவு]

தமிழ்மறைக் கழகத்தின் பத்தொன்பதாவது திருக்குறள் மாநாடு இன்று மாலை நெடுந்தீவு மகாவித்தியாலய மகாநாட்டரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

விழாவின் ஆரம்பநிகழ்ச்சியாக திருவள்ளுவரின் திருவுருவச்சிலையை அருட்திரு இ பீற்றர் துரைரட்ணம் அடிகளார் திறந்துவைப்பார்.

இதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை எம் பி யும் தமிழ் மறைக் கழகத்தின் தலைவருமாகிய பண்டிதர் கா பொ இரத்தினத்தின் தலைமையில் திருக்குறள் ஏட்டுச்சுவடிகள் நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலிருந்து கிராம வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும்.

மாலை 6 மணிக்கு மகாநாட்டினை வைத்தியகலாநிதி சிவஞானசுந்தரம் [நந்தி] மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார். கடவுள் வாழ்த்தினை நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்கள் பாடுவர்.

மாலை 7·30 மணிக்கு சிறப்பு மலர் வெளியீடு. வெளியிட்டு வைப்பவர் பண்டிதர் கா பொ இரத்தினம், மலர் விமர்சனம் புலவர் ஈழத்து சிவானந்தன். 8-30 மணிக்கு சொற்பொழிவு ""பொறுமைபோற்றும் பொதுமறை"" - வ பொன்னம்பலம், ""திருக்குறள் கூறும் கல்வித் தத்துவம்"" - திரு ஆர் எஸ் நடராசா, ""குறள் விளக்கும் பொருளியல் கருத்துக்கள்"" - திரு க சிவநாயகமூர்த்தி, ""வள்ளுவரும் வாழ்வியற் பண்புகளும்"" - மு ஆனாசுந்தரம் ""வள்ளுவர் காட்டும் வாழ்க்கை"" - ஏ டபிள்யு விரிசநாயகம், ""திருக்குறளில் சில உவமை மணிகள்"" - திரு சு விடைக்கலமத்து

இரவு 9-00 மணி "வள்ளுவர் கண்ட பெண்மை" என்னும் பொருளில் கவியரங்கு. பங்கு கொள்வோர் திரு நா க சண்முகநாதபிள்ளை, வ ஐ ச ஜெயபாலன். செ மகேஸ், திரு சு தியாகலிங்கம்.

இரவு 10 00 மணி சிறப்புரை தமிழக அறிஞரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக துணை பேராசிரியர் கலைக்காவலர் கலாநிதி ஆறு அழகப்

[6-ம் பக்கம் பார்க்க]

## 'ஊழலற்ற நிர்வாகத்திற்கு பூரண ஒத்துழைப்புக் கொடுப்போம்'

### யாழ், மாநகரசபையில் ஏபிரகாம்

[யாழ்ப்பாணம்]

"சபையில் நேர்மை நடந்தால் அதனை எடுத்துக் காட்ட ஒரு கட்சி மிக அவசியம். எனவே எதிர்க்கட்சி இருக்க வேண்டும். நகர அபிவிருத்திக்கும், வரியிறுப்பாளர் முன்னேற்றத்திற்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்"

யாழ். மாநகரசபையில், தமிழ் காங்கிரஸ் உறுப்பினரான டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்

டாக்டர் ஏபிரகாம் மேலும் கூறியதாவது:

முதல் கூட்டத்தில் முதல்வரும், உதவி முதல்வரும் உரைநிகழ்த்துமுன் அவர்களை உறுப்பினர்கள் வாழ்த்துவது தான் வழக்கம். ஆனால், மேயர் சதலி வாழ்த்தப்பட்டு விட்டனர்

முதலாவது மக்கள் மேயர் நண்பர் விஸ்வநாதன் என்று கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன். 72-ம் ஆண்டு மேயர் துரையப்பாவை வெற்றிகொண்ட ஒரே ஒருவர் நண்பன் விஸ்வநாதன் என்று கூறியிருந்தேன், அது இன்று உண்மையாகி

[6- பக்கம் பார்க்க]

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்பாள் 5-ம் திருவிழா 10- 06- 79 ஞாயிற்றுக்கிழமை
விசேட நிகழ்ச்சி
தாரர்புரம் சுந்தரராஜன் குழுவினரின் இசைகானம்
தென்னிந்திய திரைப்பட பின்னணிப் பாடகர்கள் இசையமைப்பாளர்கள் கலந்துகொள்கிறார்கள்.
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்
2714
5 ம் திருவிழா உபயகாரர்கள்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

3 ஸ்ரீ B.S.A. 3.5, B-31 மொடல், உன்னத நிலையில் விற்பனைக்குண்டு. அமிர்த சுரபி வைத்தியசாலை, 553, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2685

டாக்டரின் உபயோகத்தில் உள்ள EL 9000 தொடர் இலக்க A 50 ஒஸ்ரின் கேம்பிறிஜ் கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு! திருமதி குழந்தைவடிவேல், சுதுரிப் பாய், இச்சுவேலி. 2689

கூடுதல் பயன் தரக் கூடிய நல்ல இன செவ்விழநி தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொழிற்சாலையில் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் - யாழ்ப்பாணம். 2701

### தேவை

நவீன முறையில் பிளவுஸ்கவுண், மற்றும் உடைகள் வெட்டித்தைக்கக்கூடிய பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 2669, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2669

### விற்பனைக்கு

11-6-79 வதிருப்பளை அம்மன் பொங்கலன்று கோவில் வீதியில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனை நடைபெறும். மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன்பாக்கும், மில்க்வைற் வெளியீட்டு பிரசுரங்களும் அன்பளிப்பாக கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர விற்பனை வாகனத்தில் கொடுத்து துவாய், அப்பியாசக்கொப்பி, மில்க்வைற் செய்தி, வெளியீட்டுப் புத்தகங்கள் யாவற்றையும் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். 2664

5', 6'' × 8' சிகப்பு வர்ண கம்பளம், 11', 6'' × 12' வர்ண நிலவிரிப்பு, விலையுயர்ந்த இரட்டைப் படுக்கை விரிப்பு. யாழ். ஸ்ரேசன் ஒழுங்கை, 32ம் இலக்கத்தில் பார்வையிடலாம். 2706

### குத்தகைக்கு

தோட்டத்தரை. முத்தை பன்கட்டு வலதுகரையில் பேராற்று ஓரமாக கடலை, வெங்காயம் முதலிய செய்கைக்குரியதும் வாய்க்கால் தண்ணீர் வசதியுடனும் ஆற்றிலிருந்து தண்ணீர் அடிக்கக் கூடியதுமான தரை குத்தகைக்குண்டு. கடிதமூலம் தொடர்புகொள்க: விளம்பர இலக்கம் 2681, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2681

## திருமண அழைப்பு

உ

அன்புடையீர்!

நிகழும் சித்தார்த்தி வருடம் வைகாசிமாதம் 28-ம் நாள் (11-6-79) திங்கட்கிழமை காலை 5-30 மணிமுதல் 7-00 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| செல்வன்<br>கந்தையா தெய்வேந்திரன்<br>[A.C. M A Dip, P F.M.]<br>கணக்காளர்,<br>(அரசாங்க அழுத்தகம்)<br>அவர்களுக்கும் | எமது புதல்வி<br>செல்வி<br>சிவமணி<br>அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில், திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி பணிவன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

மல்லாகம் 6-6-79.

வ. க. மயில்வாகனமும், பாரியாரும்

2679

# தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சிக் கிளை

1979 யூன் 11 திங்கட்கிழமை தொடக்கம் ஏ. கே. ஆர். கட்டடம், கரடிப்போக்குச் சந்தி

## கிளிநொச்சியில்

தனது வழமையான அலுவல்களை

மீண்டும் ஆரம்பிக்கும்

2692

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெரு, 175-ம் இலக்க வீட்டில் வசித்து மரணசாதனமெதுவுமில்லாமல் இறந்த வேலுப்பிள்ளை இராமுப்பிள்ளை தம்பிப்பிள்ளையின் ஆஸ்தி சம்பந்தமான தத்துவ வழக்கின் சார்பாக

காலஞ்சென்றவர்

தத்துவ வழக்கு இல. த/3459

வேலுப்பிள்ளை இராமுப்பிள்ளை தம்பிப்பிள்ளை கைம்பெண் புவனேஸ்வரி 175-ம் இல. முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

மனுதாரர்

எதிராக

1. வே இ. தம்பிப்பிள்ளை நவரத்தினம்
2. வே. இ. தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசு
3. வே இ தம்பிப்பிள்ளை சுர்மரத்தினம்
4. வே. இ. தம்பிப்பிள்ளை மகள் இராஜேஸ்வரி
5. வே. இ தம்பிப்பிள்ளை மகள் பரமேஸ்வரி
6. வே. இ. தம்பிப்பிள்ளை மகள் விக்கினேஸ்வரி.
7. வே இ தம்பிப்பிள்ளை மகள் மோகனேஸ்வரி

எல்லோரும் 175-ம் இல. முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

எதிர் மனுதாரர்கள்

மேற்படி வழக்கு மேற்குறிக்கப்பட்ட இறந்தவரின் மரணச்சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

இதில் அக்கறை உள்ளவர்கள் எவரும் 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அப்பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாகச் செய்யக் கூடாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர்.

பொ. பாக்கியநாதன், பதிவாளர்.

1979-ம் ஆண்டு ஆனி மாதம் 7-ந் திகதி.

தயாரித்தவர்:

வே. கனகசபை, மனுதாரரின் சட்டத்தரணி.

2702

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### இராமநாதன் நுண்கலைக் கல்லூரி

### இசை நடனத் துறைகளில் டிப்ளோமா நெறியைப் பயில்வதற்கான அனுமதி 1979

மேற்குறித்த கல்வி நெறியைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 1979 யூன் 20-ந் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவங்களும் மேலதிக விபரங்களும் 9'' × 4'' அளவினதான உங்கள் முகவரி கொண்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித மேலுறையை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், தேர்வுகள் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிற் பதிவாளர்.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 6-6-79. 2707

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மழை — இடைவெளி

# நாளை மேடைக்கு வரும் இரு நாடகங்கள்



சிறந்த மேடை நாடக வரிசையில் வானொலியில் ஒலிபரப்பாகியதும் பலதடவை கொழும்பில் மேடையேறியதுமான 'மழை' நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறுகிறது.

"பாசமும் வெறுப்பும் அடிப்படையில் ஒரே உணர்வு தானே?" என்று மனோதத்துவ ரீதியில் குழம்பி இறந்து போன தகப்பனின் நினைவுச் சுழலில் சிக்கித் தவிக்கும் மகள் நிர்மலா. தங்கையின் இந்த நிலைக்கு மேலும் தூபம்போட்டு ரசிக்கும் அண்ணன் ரகு. இந்த அசாதாரணமனிதர்களிடையே அங்கு வந்து மாட்டிக்கொள்ளும் டாக்டர் ஜேம்ஸ் இந்த நான்கு பாத்திரங்களோடு மிகச் சுவையான உரையாடல்களோடு வளர்கிறது இந்த 'மழை' நாடகம். நிர்மலாவாக ஆனந்தராணி ராஜரத்தினமும், தகப்பனாக இர. ஸ்ரீநிவாசனும், டாக்டர் ஜேம்ஸாக மு. நித்தியானந்தனும், ரகுவாக க. பாலேந்திராவும் நடிக்கின்றனர்.

ஒரு 'சுவிச்'ஐ இழுத்தால் பிரபஞ்சமே அழிந்துபோய் விடும் என்ற இந்த விஞ்ஞான யுகத்தில் தனிமனிதன் மிகவும் பரிதாபமானவனாகிறான். மொழி அர்த்தமற்றுப்போய் சமூக உறவுகள் சிதைந்து போகும் பரிதாபநிலையை நகைச்சுவையோடு சித்தரிக்கும் அபத்தப்பாணி நாடகங்கள் மிகவும் அண்மையில்தான். மரபு நாடகங்களை எதிர்த்துத் தோன்றியவை. இந்தப்பாணியில் பேராசிரியர் ஒருவரின் மிகப்பரிதாபமான நிலையை சித்தரிக்கும் நாடகம்தான் 'இடைவெளி'. அயனெஸ்கோ எழுதிய இந்த மூல நாடகத்தை மொழிபெயர்த்த நிர்மலா நித்தியானந்தனோடு, எஸ். ஜெரால்ட், க. கே. ராஜா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

'கண்ணாடி வார்ப்புகள்', 'புதிய உலகம் பழைய இருவர்', 'பசி', 'ஒரு பாலை வீடு' போன்ற நாடகங்கள் வரிசையில் இடம்பெறும் இந்த நாடகங்களும், யாழ்ப்பாணத்தில் தோன்றியுள்ள புதிய நாடக ஆர்வலருக்கு வலுவளிக்கும் என நம்பலாம். இலங்கை அவைக்காற்றுக் கலைக்கழகம் மேடையேற்றும் இந்த இரு நாடகங்களையும் க. பாலேந்திரா நெறிப்படுத்தியுள்ளார்.

—என். பி. என்.

## கூட்டணிக் கூட்டம்

(கல்முனை)

தமிழர் விடுதலைக் கூட்டணியின், பிரசாரக் கூட்டமொன்று இன்று சனிக்கிழமை மாலை தம்பிலுவிலில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்படப் பல கூட்டணி எம். பி. க்கள் உரையாற்றுவர். (கெ-அ)

## OVERSEAS VACANCIES GRANDMET

### PERSONALLY CALLING

Applications are invited on behalf of our Principals in Sultanate of Oman who require experienced-Quantity Surveyors. Please apply in person on 12-6-79 at 9 a.m with your Applications in triplicate copies of Certificates, 3 passport size photographs, personal details and photostat copies of Certificates — Free air passage, Free accommodation. Other entitlements like annual leave, Gratuity etc., are available.

Apply in person to :-

Manager, (Administration)
Overseas Employment Division,
"Grand Met".
297, Galle Road, (Upstairs)
Kollupitiya.

(Agency Licensed by the Labour Dept. No. 119)

2711

## JAFFNA

MARIANE TRAINING INSTITUTE FOR MONTESSORI METHOD OF EDUCATION

1. Montessori Diploma Course (6 Months duration) Commencing 14th June 1979
2. Special Correspondence Course for working Students
3. Qualified Lecturers
4. Typed lecture notes & books will be provided.
5. Immediate Employment assured for the first five successfull Candidates on Completion of the Course. For more detailsapply immediately with self addressed Envelop to.

DIRECTOR,
MARIANE TRAINING INSTITUTE,
98/2, Point Pedro Road,
Anaipanthy, Jaffna.

2673

# "நகர நிர்வாகக்குறைகளை எதிர்க் கட்சியினர் சுட்டிக்காட்ட வேண்டும்

## வரியிறுப்பாளர்களும் சட்டம் ஒழுங்குக்கு உட்பட்ட கோரிக்கைகளையே முன்வைக்கவும்"

### யாழ். மாநகரசபை முதற்கூட்டத்தில் மேயர் விசுவநாதன்

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாண மாநகர சபைக்கு எதிர்க்கட்சியாக வந்திருக்கும் உறுப்பினர்களுக்குப் பெரும் பொறுப்புண்டு. நிர்வாகத்தில் ஏற்படும் குறைகளை தவறுகளை அவர்கள் சுட்டிக்காட்டவேண்டும், மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மக்கள் சார்பில் அவர்கள் தெரிவிக்கும், அல்லது முன்வைக்கும் ஆக்கபூர்வமான கண்டனங்கள் யாவும் செவிமடுக்கப்படும். பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். சுட்டிக்காட்டப்படும் தவறுகள் உடனுக்குடன் நிவர்த்திசெய்யப்படும''

இவ்வாறு யாழ் மாநகர சபையின் புதிய மேயர் திரு. இராசா விசுவநாதன் மாநகராட்சி மன்றத்தின் புதிய கூட்டத்தொடரை நேற்றுக் காலை ஆரம்பித்துவைத்துஉரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''வெயிலில் காய்ந்தால் தான் நிழலின் அருமை தெரியும் அதுபோல் உரிமை மறுக்கப்படுகின்ற போதுதான் உரிமைவாழ்வின் மகத்துவம் புலப்படும். மக்களாட்சியின் மாண்புக்காக கடந்த பத்து ஆண்டுகாலம் தவித்து நின்ற யாழ் நகர வரியிறுப்பாளர் மீண்டும் மக்கள் ஆட்சி மலர்ந்துள்ளமையால் பூரித்து மகிழ்ச்சிகொண்டாடுவது இயல்பே.

''வாராது வந்த அந்த ஜனநாயக உரிமையை, உள்ளூராட்சி அதிகாரத்தைப் போட்டடிக்காது - மன்றத்தில் மீண்டும் எதேச்சாதிகாரத்துக்கு இடந்தராது - சிறந்த நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பைக் கடந்த மாநகர தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் மக்கள் நம்பிக்கையுடன் கையளித்துள்ளார்கள். அதற்காகத் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பிலும், மக்களால் வெற்றிவாகை சூட்டப்பட்ட உறுப்பினர்கள் சார்பிலும் முதற்கண் யாழ்ப்பாண மாநகர வாக்காளர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

''யாழ் மாநகரசபையின் நிர்வாகத்தை ஊழலற்றதாகவும், சிறப்பாகவும் கொண்டுநடத்தும் பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைமைப்பீடமும், யாழ் மாநகர வாக்காளப் பெருமக்களும் என்மீதும் ஏனைய சபை உறுப்பினர்கள் மீதும் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் நாணயமாகவும் நாம் நடந்து கொள்வோம் என்றும் வரியிறுப்பாளர்கள் யாவரும் பெருமைப்படும் வகையில் இம் மாநகரின் நிர்வாகத்தை சீராகவும், சிறப்பாகவும் நிர்வகிப்போமென்றும் இச் சந்தர்ப்பத்தில் உறுதியளிக்கின்றேன். எனது சக்திக்கும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கும் மட்டுமே கட்டுப்பட்டு என்னை முற்றிலுமாக இப் பணிக்கு அர்ப்பணிக்கின்றேன். அது போன்றே ஏனைய உறுப்பினர்களும் தங்களை மக்கள் பணிக்கு அர்ப்பணிக்கவேண்டும்.

''தமிழர்விடுதலைக்கூட்டணியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்று தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒரு கோஷ்டியாக தொடர்ந்தும் இயங்கி இம் மாநகரின் முதல்வர் என்ற வகையில் எமது பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பார்கள்

''மாநகரசபைக்கு மதிப்புக்குரிய எதிர்க்கட்சியாக வந்திருக்கும் உறுப்பினர்களுக்கும் பெரும் பொறுப்பு உண்டு. நிர்வாகத்தில் ஏற்படும் குறைகளை தவறுகளை அவர்கள் சுட்டிக்காட்டவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் என்றவகையில் மக்கள் சார்பில் அவர்கள் தெரிவிக்கும் அல்லது முன்வைக்கும் ஆக்கபூர்வமான கண்டனங்கள் யாவும் செவிமடுக்கப்படும். பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். சுட்டிக்காட்டப்படும் தவறுகள் உடனுக்குடன் நிவர்த்திசெய்யப்படும். குற்றம்காணவேண்டும் என்பதற்காகவன்றிக் குறைகள் களையப்படவேண்டும் என்பதிலேயே நாட்டம்செலுத்த வேண்டும் மதிப்புமிக்க அவர்களின் கருத்துரை சபையின் ஆலோசனைக்கு கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்படும். சிறுபான்மையினர் கருத்துக்கு மதிப்பு அளிப்பதே ஜனநாயக தத்துவத்தின் மகிமை அதனை நாம் உணராதவர்கள் அல்ல. நகரின் நலன் முன்னேற்றப்பட அதன் அத்தியாவசியத்தை நாம் உணர்ந்திருக்கிறோம்.

மாநகரசபை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஜூன் முதலாம் திகதி நான் முதல்வர் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட அத்தினத்திலேயே தமது மனப்பூர்வமான ஒத்துழைப்பை நல்குவதாகப் புதிய நிர்வாகத்துக்கு உறுதியளித்து விட்டார்கள். அதற்காக மாநகர வரியிறுப்பாளர் சார்பில் அவர்கள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

''வரியிறுப்பாளர் பொதுமக்களின் ஒத்துழைப்பு எமக்கு மிக மிக அவசியம் நகரின் நலன் கருதி அதன் விருத்தி கருதி சட்டத்துக்குப் புறம்பான எந்தச்செயல்களிலும் ஈடுபடாதிருக்கவும், சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் மீறுதல்களுக்கு விதிவிலக்குக் கோராதிருக்கவும் வரியிறுப்பாளர்களையும் பொதுமக்களையும் வேண்டுகிறேன்.

நகரின் முன்னேற்றத்துக்காகவும் நகர மக்களின் நலனுக்காகவுமே சட்டமும் ஒழுங்குகளும் உள்ளன. நகரின் முன்னேற்றத்தையும் மக்களின் நலனையும் நாடி நிற்கும் நாம் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு பேணி சட்டத்துக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் மற்றும் மரபுகளுக்கும் அமைந்தே எமது எதிர்ப்புக்களை விருப்பங்களை வலியுறுத்தவேண்டும். அவ்விதம் விடுக்கப்படும் கோரிக்கைகள் கண்டிப்பாக நிறைவேற்றப்படும்''. (கெ-அ)

---

### மக்கள் கருத்து

## சாதனைவீரர்களும் நாட்டுப்பற்றும்

அண்மையில் சிலநாட்களாக எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் 'உலகசாதனை! உலகசாதனை' என்ற செய்திகள் அடிக்கடி வருவதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இந்த உலகசாதனை என்பதை எல்லோர் எண்ணத்திலும் உதிக்கவைத்த பெருமை ஆழிக்குமரன் ஆனந்தனையே சாரும் ஆனந்தன் பல சாதனைகளை முறியடித்தவரும் இன்னும் பல சாதனைகளை முறியடிக்க முயற்சியெடுத்துக்கொண்டிருப்பவருமாவார் இவர் உலகசாதனைகள் பலவற்றையும் முறியடித்து ஒரு உலக சாதனை வீரனாக வரவேண்டுமென்று விரும்பிய முதல் இளைஞருமாவார்.

இதுவரை இவர் நிலைநாட்டிய உலகசாதனைகளில் 'டுவிஸ்ட்' நடன சாதனையும் ஒன்று இச்சாதனை எல்லோரையும் கவர்ந்த நிகழ்ச்சிகளில் ஒன்று எனினும் இன்றும் பலராலும் அதைச் சாதிக்கக் கூடியதாயும் இலகுவானதாயும் கருதி முயற்சி எடுத்த பலர் தோல்வி கண்ட பொழுதும் சிலர் அதை முறியடித்து வெற்றிகண்டுள்ளனர். இது ஒரு உலகசாதனையாய் இருந்தாலும் நாட்டுப்பற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இப்படி உள்நாட்டிலேயே ஒரே சாதனையை மாறிமாறி முறியடிப்பதைப் பார்த்தால் இது ஒரு உள்நாட்டு முறியடிப்புச் சாதனையாகத்தான் மாறி வருவதாகத் தோன்றுகிறது.

உண்மையான நாட்டுப்பற்றும் உறுதியான நம்பிக்கையும் கொண்டு உலகசாதனையை முறியடிக்க முன்வரவேண்டும். வெறும் சுயநலத்திற்காகவும் உழைப்பிற்காகவும் அவை மாறக்கூடாது நாட்டின் பெருக்கும் புகழுக்குமாகச் செய்யப்படவேதொன்றுமின், உலகநாடுகளில் செய்த சாதனைகளை எமது இலங்கை நாட்டிலுள்ள ஒருவர் முறியடித்து வெற்றிகண்டால் போதும். அது இலங்கை நாட்டிற்கே கிடைத்த ஓர் உலகப் புகழாகும். வேறு எந்தநாட்டிலாவது அத்தச் சாதனையை ஒருவர் முறியடித்துவிட்டார் என்றால் அதை மீண்டும் இலங்கையிலுள்ள ஒருவர் முறியடித்து வெற்றிகாண விழையலாம்.

தற்பொழுது இலங்கையில் சாதனைகள் இனரீதியாகவும் சாதி சமய ரீதியாகவும் இடரீதியாகவும் வேறுபடுவதை அண்மையில் அவதானிக்கக் கூடியதாய் இருக்கின்றது. இப்படி தமக்குள் நாமே போட்டி மனப்பான்மையை வளர்த்து உள்நாட்டிற்குள்ளே வே போட்டி பூசல்கள் ஏற்படுத்துவது அவ்வளவு ஏற்புடைத்தன்று.

இத்தகைய உலகசாதனைகளை நிலைநாட்டும் பொழுது இவற்றிற்கு அனுமதி வழங்கும் மேலிடத்தாரும் சில புதிய விதிகளைக் கையாளுதல் சிறந்ததொன்றாகும் உலகசாதனையொன்றை முறியடிப்பதற்கு முதலில் விண்ணப்பிப்பவருக்கு அனுமதி வழங்கி, அவர் தோல்விகண்டால் அடுத்தவருக்கு அனுமதி வழங்கலாம். இங்ஙனம் முதலில் விண்ணப்பித்தவர் ஓரேமுறையில் வெற்றிகண்டு விட்டால், அதே சாதனையை முறியடிக்க உள்நாட்டு வீரருக்கு அனுமதி வழங்குதல் கூடாது. எனினும் அதேகுறித்த சாதனையை வேறுநாட்டிலுள்ள யாராவது முறியடித்தல் கண்டால் நமது நாட்டுச் சாதனை வீரர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தல்வேண்டும். நாட்டுக்கு நாடு புகழைத் தேடுவ இச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமே யன்றி உள்நாட்டிலேயே இருக்குத் திக்காக உலக சாதனைகளை முறியடிக்க அனுமதி வழங்குதல் நல்லதன்று.

ஏதாவது ஒரு புதிய சாதனையை நிலைநாட்ட முன்வருவோருக்கு எக்காலத்திலும் அனுமதி வழங்குதல் தவறென தொன்றல்ல. சாதனைகளை நிலைநாட்ட நினைக்கும் எந்த ஒரு வீரனிற்கும் நாட்டுப்பற்று நிறைந்திருக்கவேண்டும். சாதனைகளைச் செய்ய முன்வரும் போது அவர் செய்யும் சாதனை இந்த நாட்டிற்கே பெரும் புகழும் பெற்றுக் கொடுக்கும் என்ற உணர்ச்சி எழவேண்டும்.

எந்த ஒரு சாதனை வீரரும் தம்புகழை விரும்பாது இன, மொழி, சாதி, சமய வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையால் உலகசாதனைகளை முறியடிக்க முன்வருவார்களானால் அதனால் கிடைக்கும் பேரையும் புகழையும் உலகநாடுகளிடையே எமது சிறிய நாடாகிய இலங்கையும் பெற்றுக் கொள்ளும்.

கு. கனகலிங்கம்
அரசடி வீதி
நல்லூர்.

---

## இன்று விசாகப்பொங்கல்

[தெல்லிப்பழை]

ஏழாலை மத்தி துவரைக் கலட்டி வற்றுப்பளை கண்ணகை அம்பாளிவருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் இன்று முற்பகல் நடைபெறவிருக்கின்றது.

---

## தேவாலய கொடித்தினம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய திருப்பணி நிதிக்காக வருடாந்த கொடித்தினம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி 13-ந் திகதிவரை நடாத்தப்படவுள்ளது.

கொடித்தினத்துக்கு இன, மத வேறுபாடுகளைக் களைந்து பெருநிதியினை வாரி வழங்குமாறு, மேற்படி ஆலய பங்குத்தந்தை அருட்திரு பி. குசைப் பிள்ளை பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [கெ-அ]

---

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு தேசிய லொத்தர்சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற 723-வது தேசிய லொத்தர் சுவீப் இழுப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
23 R 0500
ரூபா 100,000-00

இரண்டாவது பரிசு
05 V 0905
ரூபா 40,000-00

மூன்றுவது பரிசு
21 N 0881
ரூபா 10,000-00

தலர ரூபா 1,431 சதம் 24 பெறும் 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

05 A 0970
06 A 0815
24 A 0682
14 B 0894
15 B 0520
12 B 0510
32 B 0869
11 C 0805
14 C 0066
01 D 0020
03 D 0724
06 D 0464
08 D 0509

15 N 0109
16 N 0753
24 N 0164
29 N 0298
09 O 0150
10 O 0441
10 P 0849
03 Q 0318
07 Q 0872
18 Q 0490
26 Q 0653
27 Q 0579
32 Q 0338

32 Q 0615
14 D 0789
16 D 0005
04 E 0589
08 E 0109
30 E 0364
24 F 0006
24 F 0087
28 F 0455
29 F 0764
30 F 0995
03 G 0997
16 G 0657
17 G 0800
26 G 0324
05 H 0661
06 H 0942
08 H 0471
11 H 0084
15 H 0386
18 H 0094
23 H 0045
29 J 0504
07 K 0476
08 K 0708
14 K 0565
18 K 0513
29 K 0776
04 L 0110
08 L 0202
16 L 0117
10 M 0303
24 M 0825
02 N 0836
09 N 0126
12 N 0658
14 N 0845

03 R 0410
04 R 0790
04 R 0871
07 R 0667
20 R 0378
01 S 0041
01 S 0612
01 S 0716
18 S 0103
29 S 0164
12 T 0608
26 T 0372
29 T 0547
30 T 0565
14 U 0452
24 U 0941
31 U 0687
03 V 0093
08 W 0585
10 W 0491
11 W 0410
23 W 0416
12 X 0105
13 X 0426
27 X 0898
19 X 0134
01 Y 0176
06 Y 0107
15 Y 0534
28 Y 0325
31 Y 0323
01 Z 0714
01 Z 0811
14 Z 0445
15 Z 0217
17 Z 0187
25 Z 0410

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

---

## தொழில் நுட்ப ஆலோசனைகள்

கைத்தொழில் நிலையம் ஸ்தாபிக்க, விஸ்தரிக்க தொழில் நுட்ப நிர்வாக ஆலோசனைகளுக்கு தொடர்பு கொள்ளவும். விண்ணப்பிக்கவும் :
விளம்பர இல : 2710
C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
2710

## சுழிபுரம் பறளை ஸ்ரீ சிவசுப்பிரமணியகோவில் ரதோற்சவ சிறப்பிதழ்

# பார்க்க வாரீர் பறளையம்பதி

- சு. சுந்தரம்பிள்ளை (பி. ஓ. எல்.)

சுழிபுரம் -

இலங்கையின் சிரசெனப் போற்றப்படுவது யாழ்ப்பாணம். இதன் வடமேற்குப்புறமாக தொன்றுதொட்டு சைவ சமயமரபில் திளைத்த ஊராக அமைந்துள்ளது சோழியபுரமாகும். சோழமக்கள் வாழ்ந்த காரணத்தால் சோழியபுரம் என அழைக்கப்பட்டு காலக்கிரமத்தில் சுழிபுரம் என மருவிற்று.

எம்மூர் சரித்திரப் பிரசித்தி பெற்றது. இராமனின் திருப்பாதங்கள் பதியப்பெற்றமையால் திருவடிநிலை எனப்படும் பகுதி ஊரின் வடமேற்குக் கரையில் அமைந்துள்ளது இதி மலைக்குச் சமமான தீர்த்தவிசேடம் மிக்க பதி இப்பதியாகும்.

புத்தரின் உபதேசங்களை ஈழத்தில் புகுத்தவந்த அசோக மன்னனின் மகனான சங்கமித்தை எம்மூரின் கடற்றுறையான சம்பில்துறையில் வந்து இறங்கினாள் என வரலாற்று அறிஞர் கூறுகின்றனர்.

எம்மூர் மக்கள் சமயத்தோடு ஆங்கிலம் தமிழ் ஆகியதுறைகளில் கைதேர்ந்தவர்கள் இத்தொகுதியின் மத்திய கல்வி நிலையமாக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அமைந்துள்ளது கடந்த 100 வருடங்களுக்கு மேலாக உலகின் பல பாகங்களிலும் சென்று திரைகடலோடி திரவியம் தேடிய தோடு எம்மூரின் சிறப்பினை மேம்படுத்துவதில் சளியாது உழைத்துவருகின்றனர் எம்மவர்கள்.



இவ்வூரின் ஆங்காங்கு பல ஆலயங்கள் உள இவற்றுள் இருகண்கள் என வர்ணிக்கப்படுவன விக்கின விநாயகரும் அவன் தம்பி கந்தவேளும் வீற்றிருக்கும் பறளையம்பதியாகும்.

சுந்தரம் சேரும் பழமை பறளை என சின்னத்தம்பி புலவர் அவர்கள் கூறியுள்ளார். இப்பதி மிக அழகுவாய்ந்தது நாலாபக்கமும் வயல்கள்; நடுவண் ஆலயம்; இராவணனின் அரண் ஆகாயத்தில் தொங்கிய தென்பர் அறிஞர். மாலை வேளைகளில் வயல்களில் நின்று கவனித்தால் பறளையம்பதி ஆகாயத்தில் தொங்கும் காட்சியை இன்றும் காணலாம்.

இங்குள்ள முருகன் ஆலயத்தின் தெப்பக்குளம் சரவணப் பொய்கையோவெனக் காண்போர் உள்ளம் கவராமலிலது. இக்குளத்திலே நீராடி அரசொடு வேம்பு சேர்ந்த நிழலிலே சற்று இருந்தால் பக்தர் உள்ளத்தில் முருகனும் கணபதியும் காட்சி தருவார்கள். பறளையைப் பார்க்கவந்தால் பக்திபரவசம் தானாகவே வந்துவிடும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்த சின்னத்தம்பிப்புலவர் இங்குள்ள கணபதிமேல் காதல் கொண்டு 'பறளை விநாயகர் பள்ளு' என்னும் நூலை இயற்றியுள்ளார். இன்று ஈழத்தின் ஈடுஇணையற்ற தமிழ் மூதறிஞர் எனப்போற்றப்படும் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பறளை விநாயகருக்கு ஊஞ்சற்பா பாட மறக்கவில்லை. கொக்குவில் வாசியாகிய பண்டிதர் சிவப்பிரகாசம் அவர்கள் 'திருவோங்கு சுழிபுரத்தில் சிவமோங்கு பறளை' எனக் கூறியுள்ளார்.

'பந்தமெலாம் விட்டகல அருளைக் கூட்டும் பறளை விநாயகர் என்னும் படமின்றி பழவினைகளாவும் ஓட்டும் பறளையுறை பரஞ்சோதி' என்றும் சைவப்பேரறிஞர் பண்டிதர் கூறியமை பறளையைப் பார்க்க வேண்டுமென்று தோன்றவில்லையா? இங்கு காலந்தவறாது இறைவழிபாட்டினை நடாத்துவதில் அந்தணர்களும் ஆலய நிர்வாகிகளும் இம்மியும் வழுவுவதில்லை. விக்கின விநாயகனுக்கு ஆனி உத்தரத்தின் போதும் கலியுக வரதனும் கந்தவேளுக்கு வைகாசி விசாகத்தின்போதும் இரதோற்சவம் நடைபெறும். இதைவிட கந்தசஷ்டி, கார்த்திகைத் தினங்கள், வெள்ளிக்கிழமைகள் மாத சங்கராந்தி என்பனவும் இவைபோன்றவையும் விசேட தினங்களாகும். அந்தணர்கள் மூர்த்திகளை அலங்கரித்து தீபம் காட்டும் தன்மையும் பக்தர்கள் நெஞ்சுருக கடவுள் பால் தாமே அடைக்கலம் கொடுக்கும் நிலைமையும் கண்கொள்ளாக் காட்சியாகும் பக்தரின் அங்கபிரதஷ்ணமும் அரோகரா என்ற சத்தமும் பண்ணோடு பக்திப்பாடல்களைப் பாடும் ஓசையும் பார்க்க வாரீர் பறளைப்பதி.


பறளை முருகன் அருள் எல்லார்க்கும் கிட்டுக!

திறமான புடவை வகைகளுக்கும்
நவீன டிசைன்களில் றெடிமேட் உடுப்புகளுக்கும்
சிறந்த இடம்
R. T. TEXTILES,
தொல்புரம் — சுழிபுரம்
தொலைபேசி: 806

பிரபல சரக்கு வியாபாரிகள்
க. தம்பு & சன்ஸ்,
பிரதான வீதி — சுழிபுரம்

அன்பளிப்பு
செட்டியார் அச்சகம்,
கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.

ஆங்கில மருந்துவகைகளுக்கு
பரணி மருந்துச்சாலை,
ஆஸ்பத்திரி வீதி = யாழ்ப்பாணம்
தொலைபேசி; 7386

கட்டிடப் பொருட்களுக்கு
பாக்கியரத்தினம்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,
சங்கானை

நிதெட்டிக் பிடவைகள், றெடிமேட் உடுப்புகள்,
வர்ணக்குடைகள், அன்பளிப்புப்பொருட்கள்
அனைத்துக்கும்
ர ஞ் ச னு ஸ்,
7 - 18A, நவீனசந்தை — யாழ்ப்பாணம்

தற்காலிக நாகரீகத்திற்கேற்ற
சகலவிதமான பிடவைத் தினுசுகளுக்கு
லிபட்டி டெக்ஸ்,
40 / A, நவீன சந்தை — யாழ்ப்பாணம்

ஆதரவு பெருகுதல்
அறப்பணிக்கே உதவும்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7233

சகல பலசரக்குச் சாமான்களுக்கும்
'குயின் ஸ்ரோர்ஸ்'
(உரிமையாளர்: ந. தவம்)
பிரதான வீதி — சுழிபுரம்


# தேரின்மிசையேறி எமை ஆள்வாய் முருகா

-- சு. ஷண்முகரத்நசர்மா --

வைகாசி விசாகம் என்றும் முருகனது பெருந்திருவிழாநாள் தமிழ் விளங்குமிடமெங்கும் அதுகும்பிடும் நாள். பறளை முருகன் கோவிலில் அதுதான் ரதோற்சவகாலம். எல்லோரும் பக்தர்களாகி விரதமிருந்து தவம் புரியும் காலம். ஆயிரமாயிரமாக அடிகப்பிரதட்சணம் புரியும் ஆண்களும் கும்பிடுபோட்டுக் குவிந்து வரும் குலமங்கையர் கூட்டமும் நிறைந்திருக்கும் வீதிகள். திருப்புகழும் சந்தரனுபூதியும் பாடும் முழக்கம் நாதசுரமேள முழக்கத்தை அடக்கிவிடும். குளிர்ந்த தாமரைத் தடாகமும், தென்றற்காற்றும் பக்திப் பரவசமாக்கும். முருகனுடைய திருவருட் பெருமை பற்றியோ, அவனைப் பக்தி செய்து பெறும் பேறுகள் பற்றியோ இங்கு யாருக்கும் எவரும் பிரசங்கம் செய்யவோ விரித்துபதேசிக்கவோ வேண்டுவதில்லை. எல்லோரும் அறிந்தவர்கள், அனுபவித்தவர்கள். கேட்டது கிடைக்கப்பெற்றவர்கள். நினைத்தது நடக்கப்பெற்றவர்கள். ஆகவே எல்லோரும் இன்று

"கருணை பொழி கமலமுக
மாறு மித்துளந்
தொடை மகுட முடியு
மொளிர் நூபுரஞ்
சரண கமலமென" தேரின்
மிசையேறி
வந்துகந்தெமையாள் வாய்
என வேண்டி நிற்பார்கள்.

முருகன் திருவருள் மழை பொழிவார்.

## தேரிலேறித் தேசம் செழிக்க வருக

கந்தா கடம்பா முருகையா கார்த்திகேயா சரவணனே
கருணா கரனே சிவபாலா கணேசர் உவக்கும் தம்பியுமை
மைந்தா குறமின் தெய்வானை மகிழும் கணவா என்றிதயம்
மாறுத் தாகங் கொண்டுன்னை வழிபட்டுருகும் மெய்யடியார்
சிந்தா குலந்தீர்த் தவர்வேண்டும் செல்வம் நல்கி வழியாத
திருவாழ் வருளும் பெருமானே செந்நெல் வயல்கள் பைம்பொழில்கள்
நந்தா வளஞ்சேர் பறளையமர் நாதா வருக வருகவே
நாங்கள் உய்யத் தேரேறி நயந்து வருக வருகவே

-பண்ணாகம் பண்டிதர் அ. ஆறுமுகம்.


அன்பளிப்பு
சந்திரன் அரிசி ஆலை
வாகனப் போக்குவரத்துச் சேவை
ஆர். பாலசுந்தரம்
தொல்புரம் — சுழிபுரம்

இன்று பறளாய் முருகன் சித்திரத்
தேரினில் செவ்வேள் பவனிவர
அருள் வேண்டிநிற்கும்
பறளாய் ஸ்ரீ சண்முகவேல் ரதம்
சுழிபுரம் மேற்கு

அன்பளிப்பு
பாலாவின்
நவீன
கல்வி நிலையம்
சுழிபுரம்.

செ. சிவபாதலிங்கம்
(வைரக்கல் வியாபாரம்)
220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7794

ஆயுர்வேத மருந்து
வகைகளுக்கு
க. செ. கைலாசபிள்ளை
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7135

அன்பளிப்பு
கி. சுந்தரம்பிள்ளை
(தேநீர்ச்சாலை)
பிரதான வீதி
பண்டத்தரிப்பு.

சிறந்த தயாரித்த
உடைகளுக்கு
'சிவம்'
14/A, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7423

வீட்டு மாபிள்
வேலைகளுக்கு
'மாபிள்ஸ்'
42, மக்கள் நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

சிறந்த சிற்றுண்டி,
கோப்பி வகைகளுக்கு
'றோயல் கோப்பி'
யாழ் மத்திய பஸ்-நிலையம்
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு
அம்பாள்
ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

சிறந்த படப்பிடிப்புக்கு
சிவா ஸ்ருடியோ
கெயிட் வீதி,
பண்டத்தரிப்பு

மோட்டார் உதிரிப்
பாகங்களுக்கு
'தாமோதரம்'
குளப்பிட்டி சந்தி,
கொக்குவில்.

**நாகம்ஸ்** (மல்லாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சிவாஜி
**உனக்காக நான்**

**Rio** (Jaffna) Phone : 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Next Attraction
**THE WEEKEND**
(Adults Only)

**வெஸ்லி**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
ரஞ்சன்- எம். கே. ராதா
டி. ஆர். ராஜகுமாரி
**சந்திரலேகா**

**ராஜா** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
**ஒ ளி வி ள க் கு**
புதிய பிரதி ஈஸ்ட்மன்கலர்

**மனோகரா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ராஜகுமாரி நடித்த
**கு லே ப கா வ லி**
(புத்தம்புதிய பிரதி)

24-வது வாரம்
**வின்சர்** (யாழ்ப்பாணம்) போன்: 455
தினசரி 4 காட்சிகள்
10 30, 2-00, 6-00, & 9-30
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

**REGAL** Daily at 2-00 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
**Mountain In The Jungle**
Color — Scope — Adults
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காமினி பொன்சேகா... தமிழன் நடராசாவாக...
தமிழில் பேசி நடிக்கும்
**"சறுங்கலே"** —சிங்களம் தமிழ்—
Gamini Fonseka, as Nadarajah
"SARUNGALE"—Sinhala - Tamil
Next Attraction - "BUTTERFLIES ARE FREE"

கடைசி 3 தினங்கள் மட்டும்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி: 3-00, 6-30 & 9-45
சனி, ஞாயிறு: 10-30, 2-30, 6-30 & 9-45
எம்.ஜி.ஆர் —சாவித்திரி
**வேட்டைக்காரன்** (புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7838 தினசரி 4 காட்சிகள்
A V. M ராஜன்
**நிறைகுடம்**

## போயாதினத்தை யொட்டி இன்று சினிமாக் காட்சிகள் இல்லை.

## இன்று அடிக்கல் நாட்டு விழா

(காங்கேசன்துறை)
மயிலிட்டிதெற்கு ஞானோதய வித்தியாலயப் பொன்விழா இவ்வாண்டு நடைபெற விருக்கிறது. இதனை நினைவு கூருமுகமாக வித்தியாலய மண்டபவாயிலுக்கு ஒரு முகப்பினை நிர்மாணிக்க இவ்வித்தியாலய அபிவிருத்திச் சங்க அனுசரணையுடன் ஏற்படுத்தப் பெற்ற 'பொன்விழா ஆலோசனைச் சபை' நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வாயில் முகப்புக்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் நடைபெறவிருக்கிறது. மில்க்வைற் அதிபர் திரு. க. சிதம்பரப்பிள்ளை சிவராசாவும் தென்மயிலையூர் பிரபல வர்த்தகர் திரு. இ. சின்னத்துரையும் அடிக்கல் நாட்டுவார்கள்.

இவ்வைபவம் வித்தியாலய அதிபர் திரு. மு. வை. நாகராஜன் தலைமையில் நிகழும். (ஏ)

# "யாழ். நகர் குழப்பத்திற்கும் யோகேஸ்வரனுக்கும் சம்பந்தமில்லை"

## சன்சோனிக்கமிஷன் முன் பொலிஸ் அதிகாரி சாட்சியம்

[கொழும்பு]
"செம்மணி சூட்டுச் சம்பவத்தின்போது நான் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. விசேட கடமையின் பொருட்டுக் கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொள்ள அத்தருணம் சென்றிருந்தேன்" என்று உதவிப் பொலிஸ் அதிபராகக் கண்டியில் பணிபுரியும் திரு. கொட்பிறீ குணசேகரா சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சன்சோனிக் கமிஷன் விசாரணையின்போது, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. கே. சண்முகலிங்கம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:

"பொலிஸ் அதிபரின் காரியாலயத்திற்கு முன்னால் திரு. அ. அமிர்தலிங்கம் தாக்கப்பட்ட சமயம் நான் விசேட கடமையின் பொருட்டு அனுராதபுரம் சென்றிருந்தேன். திரு அ. அமிர்தலிங்கத்தைத் தாக்கிய காரணத்திற்காக ரணசிங்க என்ற கான்ஸ்டபிள் வேலைநீக்கம் செய்யப்பட்டதை நான் அறிவேன். செம்மணி சூட்டுச் சம்பவத்தின்பொழுது நான் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. விசேட கடமையின் பொருட்டு கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்தேன். திரு. அ. அமிர்தலிங்கத்தைத் தாக்கிய கான்ஸ்டபிள் இக்கமிஷன், தனது விசாரணையை ஆரம்பித்த பின்னரே வேலைநீக்கம் செய்யப்பட்டார் என்பதை நான் ஏற்கிறேன்.

இளைஞர் கூட்டம் ஒன்று திட்டமிட்டு யாழ் நகரில் கலவரத்தை உருவாக்கியது. ஆனால் இத் தாக்குதலுக்கும் திரு. வெ. யோகேஸ்வரனுக்கும் சம்பந்தம் இருப்பதாக நான் கருதவில்லை. அரசாங்க அதிபரைப் பொலிசார் தூஷித்ததை நான் அறிவேன். ஆனால் அவர்கள் யாழ் பொலிசார் அல்ல. குருநாகல், அனுராதபுரம் ஆகிய பல்வேறு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பொலிசார் அங்கு இருந்தனர். எனவே யாழ் பொலிஸாரே யாழ் அரசாங்க அதிபரை தூஷித்தனர் என்பது சரியல்ல.

யாழ் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பல பொலிஸ்கான்ஸ்டபிள்கள் உத்தரவை மீறியதற்காகவும் கடமையில் இருந்து தவறியமைக்காக இன்றும் வேறு பல காரணங்களுக்காகவும் என்னால் குற்றம் சுமத்தப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டும் சிலர் இரவுவேலை போன்ற தண்டனைகளையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எனக்கு எதிரானவர்கள் என்றோ அல்லது என்னைப் பழிவாங்குவார்கள் என்றோ நான் கூறமாட்டேன். சோமதாச, ஜெயராஜா, சப்இன்ஸ்பெக்டர் கான் போன்ற பொலிஸ்காரர்கட்கு எதிராக நான் பல குற்றங்களைச் சுமத்தினேன் என்ற கூற்றை நான் ஏற்கிறேன்.

1977ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் திகதியிலிருந்து 20ம் திகதிவரை பொதுமக்களைப் பொலிசார் துன்புறுத்தினர் என்பதை நான் மறுக்கிறேன்.

ஆனால் கச்சேரியில் 21ம் திகதி இணைப்பதிகாரியால் அரசாங்க செயலகத்தில் ஏற்படுத்தப்பட்ட விசேட பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் பொதுமக்களைத் துன்புறுத்தியது பற்றி நான் கேள்விப்பட்டேன். யாழ் நகரில் 16ம் திகதி உதவிப் பொலிஸ் அதிபர் ஜனுப் எம். நூர்தீன் பொலிஸ் நிலையம் வந்து கலவரங்களின் தன்மை பற்றி விபரித்த பின்னர் அபாயமணி அடிக்கப்பட்டதும் பொலிஸார் அங்கு கூடினர் அவர்களுக்கு ஆயுதம் வழங்கப்பட்டன. சம்பவங்கள் நடைபெற்ற இடங்கட்கு அனுப்பப்பட்டனர். நானும் அந்த இடங்களுக்குச் சென்றேன்.

இளைஞர்கள் திட்டமிட்டு நடாத்திய இத்தாக்குதலின் போது இளைஞர்கள் ஆயுதம் எதையும் பாவித்ததாக நான் காணவில்லை. எம்மைக் கற்களால் தாக்கினர். சப் இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் 'சீதா என்ஜினியரிங் வேக்ஸ்' க்கு முன்னால் பொதுமக்களால் எறியப்பட்ட கற்களை திரட்டி ஜீப்பில் கொண்டு வந்தார்.

சட்டத்தரணி: ஆக நான்கு மூலைத் தாக்குதலை நடத்திய இளைஞர் கூட்டத்தினரிடமிருந்து நீங்கள் கைப்பற்றிய ஆயுதங்கள் வெறும் கற்கள் தானே?

சாட்சி: ஆம் ஆனால் ஒரு துப்பாக்கியும் உண்டு.

சட்டத்தரணி: அது சப் இன்ஸ்பெக்டர் குருசாமியின் சாட்சியம் கமிஷன் இது பற்றி ஆராய்ந்து உண்மையைக் கண்டு பிடிக்கும். துப்பாக்கியைக் கண்டு பிடித்தது 'திலக்' என்பவரிடம் தான் சாட்சியங்கள் அது பற்றி இங்கு நெறிப்படுத்தப்பட்டுள்ளன. (ஈ-கூ)

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 26-ம் திகதி
(சனிக்கிழமை)
9-6-1979)

**மேஷம்:** பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர்கள். அரசபயத்திற்கு இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும். அமைதி நன்று.

**இடபம்:** களஸ்திரவழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு. வாழ்வுப் பயணத்தில் வழமான திருப்பம் உருவாகும். இணைந்த இதயங்கள் இன்பத்தில் மிதக்கும். பொருள் வரவிலும் திருப்திகரமான நிலை தென்படும்.

**மிதுனம்:** எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

**கடகம்:** உழைப்பின் வெற்றிக்கு இன்று உறுதியளிக்கப்படுகிறது. அதிக பிரயாசையின் மூலம் ஆதாயத்தைத் தேடுவீர்கள். பரோபகார சிந்தை மேலிடும். சுற்றுடலின் நிலைமை சீரடையும். உழைப்புக்கேற்ற ஓய்வு அவசியம் தேவை.

**சிங்கம்:** தொழில்துறையின் வெற்றிக்கு இடமுண்டு. புதிய முயற்சிகளில் அதிக உற்சாகம் பிறக்கும். சிலருக்கு வியாபார நோக்கமாக வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் கிடைக்கலாம். சுவையான தினம்.

**கன்னி:** இரக்கசிந்தை மேலிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்து தொடர்புகள் ஏற்படுவதற்கு இடம் உண்டு.

**துலாம்:** சிறிய காரியத்தை முடிப்பதற்கும் அதிக பணத்தைச் செலவு செய்வீர்கள். ஆடம்பரப் போக்கினால் கடன் படவும் நேரிடலாம். உறங்கிக் கிடந்த பகை மீண்டும் தலைதூக்க ஆரம்பிக்கும். அவதானம் வேண்டும்.

**விருச்சிகம்:** இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். எழுத்தாளர்களுக்கு புதிய படைப்புக்கான கரு கிடைக்கும். நாடகக் கலைஞர்களுக்கு பொன்னான தினம்.

**தனுசு:** தாம்பத்திய வாழ்வில் அன்பு மேலிடும், வாழ்க்கையின் தரமும் உயரும். காதலர்களின் வாழ்வில் கற்கண்டான நாள்.

**மகரம்:** கருத்து வேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும். புதிய இடத்தில் இருந்து பகை தலைதூக்கலாம். மௌனமும் தெய்வபக்தியும் நன்று.

**கும்பம்:** இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யவும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

**மீனம்:** அறிவுத் தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள். விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதிர்பாராத பணம் கைக்குக் கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
இருபாலை க. வேலுப்பிள்ளை

## யாழ். லயன்ஸ் நன் கொடை

யாழ். நகரிலுள்ள பாடசாலைகளின் முன்னால் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு வேண்டிய சமிக்ஞைப் பலகைகளையும் கையுறைகளையும் யாழ். லயன்ஸ் கழகமும் லேடி லயன்ஸ் தொழிற்சாலையுமே வழங்கியுள்ளன. கடந்த 7-6-79 திகதிய ஈழநாடு இதழில் வெளிவந்த செய்தியில் யாழ். ரோட்டறிக்கழகம் வழங்கியதாக வெளிவந்த செய்தி தவறு. சமிக்ஞைப்பலகைகளையும் கையுறைகளையும் உபசரித்த யாழ். லயன்ஸ் கழகத்திற்கும் லேடி தொழிற்சாலைக்கும் யாழ். பொலிஸ் அதிபர் திரு. லியோ பெரேரா தமது நன்றியுரையை தெரிவித்துக் கொண்டார்.

## பருளை முருகனை வணங்கிடுவோம் வாருங்கள்

பருளை ஷண்முகப்பெருமான் இந்திரமாஞ்சை தேரேறி இன்னருள் புரிந்து இன்று எமையாளவருகின்றான் வணங்கிடுவோம் வாருங்கள்

முருகன் அடியார்
க. முத்தையா
சுழிபுரம் மேற்கு

0 0 0

## சங்காபிஷேகம்

இவ்வாலயத்தில் மகாசங்காபிஷேகம் இம்மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. பகல் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று இரவு விசேட மேளக் கச்சேரியும் 'சக்கடத்தார்' நாடகமும் இடம்பெறும்.

# பெண்ணைத் தாக்கி

## தாலிக்கொடி வழிப்பறி

[மாவிட்டபுரம்]

கோவில் வழிபாடு செய்து விட்டு வீடு திரும்பிய பெண் மணி தாக்கப்பட்டு அவரது கழுத்திலிருந்த 10 பவுண் தாலிக்கொடி சூறையாடப் பட்ட சம்பவம் ஒன்று கொல்லங்கலட்டியில் இடம் பெற்றுள்ளது.

கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவிலுக்கு வழிபாட்டுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயமே இச்சம்பவம் இடம் பெற்றது.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த கனகராசா அரியரத்தினம் என்னும் 65 வயதும் பெண் மணி காங்கேசன்துறைப் பொலிஸில் செய்துள்ள புகாரில் கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவிலுக்கு வழிபாட்டுக்குச் சென்றுவிட்டு இரவு 9 மணிபோல் வீடு திரும்பிய போது வீட்டுக்குச் சமீபமாக நபர் ஒருவர் வந்து தம்மைத் தாக்கவே தாம் விழுந்து விட்டதாகவும், அப்போது தமது கழுத்திலிருந்த 10 பவுண் தாலிக்கொடியை அவர் அறுத்துக்கொண்டு ஓடியதாகவும் தெரிவித்துள்ளார்.

பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

## தலைவர் - மேயர் கோஷ்டிகள் நாளை மோதல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் தலைவர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ். மேயர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில், நாளை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில், இநேசபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி யொன்று நடைபெறும்.

யாழ். உதைபந்தாட்ட லீகினால் நடாத்தப்படும் இப்போட்டிக்கு, யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜவிசுவநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். [இ]

## யாழ். திறந்தவெளியரங்கில் இன்று சிறுவர் கலைவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் அளிக்கும் பௌர்ணமிக் கலை நிகழ்ச்சிகள் வரிசையில் இன்று இடம்பெறும் நிகழ்ச்சிகள் அனைத்துலகச் சிறுவர் ஆண்டுக் கொண்டாட்டமாக அமையும்.

மின்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் ஆதரவில் யாழ் திறந்தவெளி அரங்கில் இன்று சனிக்கிழமை மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். முதல் நிகழ்ச்சியாக யாழ். சிவானந்த சிறுவர் சபை பாடசாலைச் சிறுவர் சிறுமியர் அளிக்கும் பக்தி நடனம் இடம்பெறும், அடுத்து ஆனைக்கோட்டை அ. மி. பாடசாலை மாணவர்கள் அளிக்கும் "முட்டாள் முதல்வன்", நாடகமும், "நவரசம்" நிகழ்ச்சியும் இடம்பெறும்.

தொடர்ந்து யாழ். பெரியபுலம் எம். எம். வ விஷ்ட வித்தியாலயம் அளிக்கும் உழவர் நடனம், மயில் நடனம், குறவன் குறத்தி நடனம் முதலான நிகழ்ச்சிகளும் செல்வி ரஜெலாஜினி சிவலிங்கத்தின் "தாரணி" நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெறும்.

சிவநெறிச் செல்வர் க. கனகராசா நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவார். [அ]

## திருமண வீட்டுக்குச் சென்றவர் வழியில் மறித்துத் தாக்கப்பட்டாராம்

### கணவன் மரணம் பற்றி மனைவி புகார்

[யாழ்ப்பாணம்]

திருமண வீடொன்றுக்குச் சென்றவர் வழிமறிக்கப்பட்டு கோடரியாலும், கத்தியாலும் தாக்கப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானாராம். இது தொடர்பாகத் தேடப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸில் சரணடைந்தார்.

இறந்தவரின் மனைவி நல்லதம்பி பொன்னி என்பவர் பொலிஸில் கொடுத்த வாக்கு மூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

மே மாதம் 25ம் திகதிஎனது கணவன் திருமணவீடொன்றிற்குச் சென்றார். சென்றவர் திரும்பவும் வீட்டிற்கு வராததால் அயலவர்கள்மூலம் விசாரித்தேன். கணவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருப்பதாக அறிந்தேன். அங்கு சென்று பார்த்தபோது கத்தியால் வெட்டப்பட்டும், கோடாலியால் தாக்கப்பட்டும் அபாயகரமான நிலையில் அவர் இருப்பதைக் கண்டேன் பின் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார் அங்கு அவர் மரணமானார்.

இறந்தவரின் மருமகன் சின்னத்தம்பி பசுபதியும் வாக்கு மூலமளித்தார்.

இதுதொடர்பான சந்தேகநபர் அரியாலையில் உள்ள நாவலடி என்னுமிடத்தைச் சேர்ந்த விநாசி செல்வரெத்தினம் யாழ் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் முத்துபண்டா முன்னிலையில் சரணடைந்தார்.

## 19வது திருக்குறள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பன்.

11-00 மணி நடனம், இசை, நாடக அரங்கு: நவகுமாரி குழுவினரின் நடனம். 11-15 யார் கொலைக்காரன்? குமரிக்கோட்டம் என்னும் இருநாடகங்கள் மேடையேறும். [கெ-இ]

## ஊழலற்ற...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டது

யாழ். நகரத்தை சிறந்த நகரமாக்க வேண்டும். ஊழியர் மத்தியில் ஊழல், லஞ்சம் நிலவினால் கண்டிக்க வேண்டும். அதே சமயம், உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் ஊழியர்களை முதல்வர் பாதுகாக்க வேண்டும்.

பைலிகளை, தலைமை இலாகா மூலமே, முதல்வர் பெற்று நடவடிக்கை எடுக்கவேண்டும். முன்பெல்லாம் உறுப்பினர் நேரடியாக சென்று ஊழியர்களுக்கு கஷ்டம் கொடுப்பார்கள், இந்த நிலை இருக்கக் கூடாது.

சில வட்டாரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் சில வட்டாரங்களில் ஒருஉறுப்பினர்கூட தெரிவுசெய்யப் படவில்லை. இந்த வட்டாரங்களை, முதல்வர் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி தேவையானவற்றை செய்து கொடுக்க வேண்டும்.

23 வட்டாரங்களில் கலைமகள், திட்டி, பொம்மைவெளி, தேவரிகுளம் மற்றும் சில பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. இப்பகுதிகளுக்கு பொது திட்டத்தில் மட்டுமன்றி வேறு விதத்திலும் அபிவிருத்தி செய்ய வேண்டியது. முதல்வரின் கடமையாகும்.

அரசியல் நோக்கத்திற்காக எவரையும் பழிவாங்கக் கூடாது.

தேர்தல் நடந்து மூன்று கிழமை சென்றுவிட்டது. நாங்கள் போட்டிகளை மக்கள் மத்தியில் வளர்ப்பது துரோகமாகும், 23 பேரும் குரோதங்களை, வேற்றுமைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நேர்மையான ஊழலற்ற நிர்வாகம் நடத்த பூரண ஒத்துழைப்புக் கொடுப்போம்.

உதவி மேயர் என் பாடசாலை நண்பர், அவருக்குப் என் வாழ்த்தை தெரிவித்து ஆணையாளர் செய்த சேவைக்கு என்பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் காங்கிரஸ் உறுப்பினரான ஜனாப் கசிம் பேசுகையில், அபிவிருத்திக்கு போதிய நிதியில்லாவிட்டால், அரசிடம் தேவையான நிதி பெற்றுத் தருவேன்' என்று கூறினார்

திரு. என். சி. செல்லத்துரை பேசுகையில், சுகாதாரம், மின்சாரம், நீர்விநியோகம், சிர்கேடு அடைந்திருப்ப

## யாழ். மாநகரசபை நான்கு குழுக்கள் ஏகமனதாகத் தெரிவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதலாவது கூட்டத்தில் கீழ்க்காணும் குழுக்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

**நிதி**

திருவாளர்கள் ஆர். விசுவநாதன் [மாநகரசபை முதல்வர்], ஆ. துரைராஜலிங்கம், நா. த. செல்லத்துரை, பி.பி. சேவியர், ஆ. சோதிலிங்கம், அ. வி. ஏபிரகாம்.

**சுகாதாரம்**

ஜனாப் முகைதீன் பிச்சை, திருவாளர்கள் ம. அலோசியஸ், சு. ஆறுமுகம், செ. எட்வேட், செ. யேசுதாசன், இ. மரியாம்பிள்ளை.

**மின்சாரம்**

திருவாளர்கள் த. கந்தையா, இ முத்தையா. ம. எஸ்பிரியல், செ. குமாரவேல், சோ. சீவரத்தினம், ஜனாப் பீ. மு. காசிம்.

**மராமத்து**

திரு சி. தியாகராசா, திரு சு. சண்முகராசா. ஜனாப் ரெமு. இமாம், திரு. த. கந்தையா, திரு யோ அ செல்வநாயகம், திருமதி சாமிநாதர் அந்தோனியர.

## இளாலி அந்தோனியார் உற்சவம்

[சாவகச்சேரி]

இளாலி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. மாலையில் நவதின வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. 12ம் திகதி இரவு நடைபெறும் விசேஷ ஆராதனைகளைத் தொடர்ந்து 13-ம் திகதி காலை திருவிழா பூசையுடனும் திருச்சொருபப் பவனியுடனும் விழா முடிவுறும். ஆராதனைகளை மிருசுவில் பங்கு குருவர் வண. பிதா. பற்றிக் ஞானப்பிரகாசம் நடாத்துகின்றார். [அ]

## நகுலேஸ்வர வித்தியாலய அபிவிருத்திச்சபை

[தெல்லிப்பழை]

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய அதிபர் திரு. வ. கந்தையா தலைமையில் அபிவிருத்திச்சபை அங்குராரம்பணக் கூட்டம் நடைபெற்ற போது பின்வருவோர் நிர்வாக சபை உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அதிபர் திரு. வ கந்தையா, உபதலைவர்கள்: திருவாளர்கள் வ கிருஷ்ண பிள்ளை, ச சுப்பிரமணியம், இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள் ச திருச்சிற்றம்பலம், ம பார்வதிநாதசிவம், பொருளாளர்: திரு சு கனக சபை 13 பேர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## பொன்விழா ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அண்ணாமலைப் பல்கலைக்கழக பொன்விழா பற்றிய ஆலோசனைக்கூட்டம் இம்மாதம் 12ம் திகதி செவ்வாய்கிழமை மாலை யாழ் வை எம் சி ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக பழைய மாணவர்கள் கலந்து கொள்ளும் இவ் ஆலோசனைக் கூட்டத்தில் துணைப்பேராசிரியர் டாக்டர் ஆறு அழகப்பன் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்வார். [கு]

## இன்று ரதோற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை கிலினர் ஒழுங்கை ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய தேர் உற்சவம் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது

**சித்தங்கேணியில்...**

சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவில் ரதோற்சவம் இன்று காலை நடைபெறுகிறது.

தாகத் தெரிவித்தார்.

யாழ் நகரசபைக் கூட்ட முழு விபரமும் திங்கள் வெளிவரும்]

## நீந்தத் தெரியாதவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கக்கூடாது

### மாரிசன்கூடல் மீனவ இளைஞர்கள் மரண விசாரணையில் அதிகாரி

[பண்டத்தரிப்பு]

அதிகாலைவேளையில் மீன்பிடிப்பதற்காக கட்டுமரமொன்றில் சென்ற இரு வாலிபர்கள் கடலுக்குப் பலியானார்கள்.

இச்சம்பவம் இளவாலைப் பகுதியிலுள்ள மாரிசன்கூடல் என்னுமிடத்தில் நடைபெற்றது. மாரிசன்கூடலைச் சேர்ந்த சகாயநாதன் [வயது 21] நெடுந்தீவைச்சேர்ந்த ஜெய தாஸ் [வயது 18] ஆகியோரே இவ்வாறு பலியானவர்கள்.

பலத்த தேடுதலைத் தொடர்ந்து இருநாட்களுக்குப் பின் இருவரது சடலங்களும் தேடுதல் நடத்திய மீன்பிடிவள்ளங்களில் சென்றவர்களினால் கண்டுபிடிக்கப்பட்டது

இவர்களது மரணவிசாரணை பண்டத்தரிப்பும் பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார் முன்னிலையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்ட மாரிசன் கூடல் கடற்கரைக்குச் சமீபத்தில் நடைபெற்றது. அத்தருணம் காலஞ்சென்ற சகாயநாதனின் தந்தை அந்தோனிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"சகாயநாதன் எனது மகன், மற்றவர் நெடுந்தீவைச் சேர்ந்தவர். எம்முடன் சம்பளத்திற்கு வேலைசெய்பவர், இருவரும் அதிகாலை இரண்டுமணிக்கு மீன்பிடிக்கப் புறப்பட்டுச் சென்றனர். நான் தேநீர் தயாரித்துக்கொண்டு காலை ஆறுமணியளவில் அவர்களின் வருகையை எதிர்பார்த்துக் கடற்கரையில் நின்றேன். நீண்ட நேரமாகியும் அவர்கள் திரும்பவில்லை. அவர்கள் சென்ற கட்டுமரம் வெறுமனே அநாதரவான நிலையில் கடற்கரையில் ஒதுங்கியிருப்பதாக ஊறணியைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் ஓடிவந்து தெரிவித்தார். அவர்கள் இருவருக்கும் ஏதோ ஆபத்து நடந்துவிட்டதாக நினைத்து நான் அழுதேன், பின்பு சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் இதுபற்றி முறைப்பாடு செய்தோம். சுமார் 15க்கு மேற்பட்ட வத்திரவள்ளங்கள்எங்கள் இடமும் தேடிவந்தன, ஒரு வள்ளத்தில் மரியதாசின் சடலத்தை போட்டுக்கொண்டு வந்தார்கள், சிறிதுநேரத்தில் எனது மகனின் சடலமும் கொண்டுவரப்பட்டது. இவர்களின் மரணத்தில் எனக்கு எவர்மீதும் சந்தேகம் இல்லை, கடலில் விழுந்து இருவரும் இறந்ததாக அபிப்பிராயப் படுகிறேன்,

காலஞ்சென்ற மரியதாசின் தாயார் திருமதி தே மந்தின், விமலதாசன், அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் சாட்சியமளித்தனர். கடலில் மூழ்கியதனால் தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கிய மரணவிசாரணை அதிகாரி "சரியாக நீந்தத்தெரியாதவர்களை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்துவது மிகவும் ஆபத்தான காரியம் என்றும், இதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்து நீந்தத்தெரியாதவர்களை கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பதில் கட்டுப்பாடுசெய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டார். சாட்சிகளை சங்கானைப் பொலிசார் ஆஜர்செய்தனர்.

## தமிழரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற முறைகேடான வழியிலேயே தேர்தல் நடைபெற்றுள்ளது.

**கம்பூச்சியப் பிரச்சனை**

ஒரு நாட்டின்மீது இன்னுமொருநாடு படைஎடுத்து ஆட்சியை மாற்றுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கம்பூச்சிய பிரதமர் பொல்பொட் பயங்கரவாதி என மேலைத்தேய பத்திரிகைகள் கூறுகின்றன. அங்கு சர்வாதிகாரத்தனமான ஆட்சி நடைபெறுவதாக நாம் எண்ணவில்லை. அணிசேரா இயக்கத்தில் எந்த அரசுக்கு அனுமதி வழங்கபட வேண்டும் என்பதை கம்பூசிய மக்களே தீர்மானிக்கவேண்டும்.

இது குறித்து இலங்கை எதிர்க்கட்சித் தலைவர்கள் விடுத்தவேண்டுகோளை யான் ஏற்கமாட்டேன். [ம-இ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No' 49, Telegram: Eelanaadu Phone: 389.